# இந்திய உயர் ஸ்தானிகராலயம்

# கொழும்பு

## ஊடக அறிக்கை

**********************

### இந்தியாவின் 73வது குடியரசு தினத்தை முன்னிட்டு நடைபெற்ற வரவேற்புபசாரம்

இந்தியாவின் 73வது குடியரசு தினத்தை முன்னிட்டு உயர் ஸ்தானிகர் மேன்மைதங்கிய கோபால் பாக்லே அவர்கள் இந்தியாவின் நண்பர்களுக்காக தனது வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் 2022 ஜனவரி 26ஆம் திகதி வரவேற்பு உபசார நிகழ்வு ஒன்றினை ஒழுங்கமைத்திருந்தார். கொவிட்-19 நெறிமுறைகள் மிகவும் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் 500க்கும் அதிகமான விருந்தினர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

2. நிதி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச அவர்கள் பிரதம விருந்தினராகவும், வெளிவிவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர். முன்னாள் ஜனாதிபதி அதி மேதகு மைத்திரிபால சிறிசேன, சபாநாயகர் கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பத்துக்கும் அதிகமான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவத்துக்குரிய இராஜதந்திரிகள், சிரேஷ்ட அதிகாரிகள் பல்வேறு துறைகள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாக இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. விருந்தினர்களை வரவேற்று உரை நிகழ்த்திய உயர் ஸ்தானிகர் அவர்கள், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் இலங்கைக்கு மிகவும் முக்கியமான இடம் வழங்கப்பட்டிருப்பதாகவும் மொழி, கலாசாரம், வரலாறு போன்ற விடயங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் காணப்படும் பல்லாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த உறவுகள் இருதரப்பு உறவுக்கு மிகவும் முக்கியமான காரணியாக இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். மேலும் இலங்கை மக்களுக்கு தேவையான ஆதரவினை அவர்களின் தேவைகளுக்கு அமைவாக வழங்குவதற்கு இந்தியா தொடர்ந்தும் உறுதி பூண்டிருப்பதாக அவர் வலியுறுத்திக் கூறினார். அத்துடன் பல்வேறு கூட்டு நிகழ்வுகள் ஊடாக இரு நாடுகளினதும் சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவினை கொண்டாடுவதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கும் திட்டங்கள் தொடர்பாகவும் அவர் இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

4. இதேவேளை, வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அவர்களின் விசேட செய்தி ஒன்று வீடியோ மூலமாக இந்நிகழ்வில் காண்பிக்கப்பட்டிருந்தது. அண்மைய காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான நெருக்கமான பொருளாதார ஒத்துழைப்பை இந்தியாவும் இலங்கையும் இலக்காகக்கொண்டிருப்பதுடன் ஒரு விசேடமான உறவினையும் இரு நாடுகளும் பகிர்ந்து கொண்டிருப்பதாகவும் அவர் அந்தச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், இரு நாட்டு மக்களினதும் ஆழமான உறவினால் வலுவூட்டப்பட்டிருக்கும் தலைமைத்துவங்கள் இடையிலான புரிந்துணர்வு காரணமாக இருதரப்பு உறவானது மேலும் துரிதமாக வலுவடையும் என்ற நம்பிக்கையையும் அவர் வெளியிட்டிருந்தார்.

5. இலங்கையர்களின் வாழ்வின் ஒவ்வொரு கோணத்திலும் அதேபோல இலங்கையின் பொருளாதாரத்திலும் இந்தியா மிகவும் நெருக்கமான ஈடுபாட்டினை கொண்டிருப்பதாக கௌரவ விருந்தினராக இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த வெளிவிவகார அமைச்சர் கௌரவ பேராசிரியர் ஜி எல் பீரிஸ் அவர்கள் குறிப்பிட்டிருந்தார். சுகாதாரம், கல்வி, உட்கட்டமைப்பு போன்ற பரந்த விடயங்களை உள்ளடக்கிய இந்தியாவின் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் விஸ்தீரணத்தையும் அவர் இங்கு சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் இருதரப்பு உறவானது விசுவாசம், நட்புறவு, நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர அக்கறை ஆகியவற்றில் வேரூன்றிய ஒன்றாக காணப்படும் அதேவேளை பெறுமானங்கள், பற்றுறுதி, போற்றுதற்குரிய நம்பிக்கைகள் ஆகியவற்றிலும் உறுதியான தாக்கத்தினை ஏற்படுத்தியிருக்கும் ஒன்றென அவர் வரையறை செய்திருந்தார்.

6. தேசபந்து கலாநிதி அருந்ததி ஸ்ரீ ரங்கநாதன் அவர்களின் நெறியாள்கையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு அரு ஸ்ரீ கலையகத்தினால் அரங்கேற்றப்பட்டிருந்த “நர்த்தன பந்தம்” நடன ஆற்றுகை இந்திய மற்றும் இலங்கை நடன வடிவங்களின் சங்கமமாக அமைந்திருந்தது. அத்துடன் இந்நிகழ்வின்போது இலங்கை இராணுவத்தின் இசைக் குழுவினரால் இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு இசைத்தொகுப்புக்களும் இசைக்கப்பட்டிருந்தன.

7. இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவினை குறிக்கும் அசாதி கா அம்ரித் மஹோத்சவ்வை முன்னிட்டு உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இந்தியாவின் 73வது குடியரசு தின நிகழ்வுகள் அமைந்துள்ளன. அசாதி கா அம்ரித் மகோத்சவ்வை முன்னிட்டு 2022 ஜனவரி 26ஆம் திகதி முதல் 2022 பெப்ரவரி 4ஆம் திகதி வரை உயர் ஸ்தானிகராலயத்தால் பல்வேறு விஷேட நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்படவுள்ளன. குறிப்பாக பாரிய கலாசார நிகழ்வு, கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பாளி வளாகத்தில் இரவீந்திரநாத் தாகூர் அவர்களின் சிலை திறந்து வைத்தல், பௌத்தமதம் தொடர்பாக சர்வதேச ரீதியில் நடத்தப்பட்ட வினா விடை போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு நிகழ்வுகள், வர்த்தக ஊக்குவிப்பு நிகழ்வுகள் போன்ற பல்வேறு நிகழ்வுகள் இக்காலப்பகுதியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**************

கொழும்பு
27 ஜனவரி 2022